23.09.2025

O.S.No. 176/2024

PW1– பாலசுப்பிரமணியன் – த/பெ. பூசைப்பெருமாள்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 23.09.2025

<u>குறுக்கு விசாரணை :</u> ( 1,2,3,5 பிரதிவாதிகள் தரப்பில்)

1. எனது தந்தை வழி தாத்தாவின் பெயர் சுப்பிரமணியன். சுப்பிரமணியன் தந்தையின் பெயர் சாமிக்கண்ணு நாடார் என்றால் எனக்கு தெரியாது. சுப்பிரமணியன் உடன்பிறந்தவர்கள் அவரையும் சேர்த்து 2 பேர். மற்றொரு சகோதரர் பெயர் சாமியாடி, வேறு சகோதரர் கிடையாது. தபசில் சொத்து ஆதியில் குற்றாலம் பிள்ளைக்கு பாத்தியப்பட்டிருந்தது. குற்றாலம் பிள்ளையின் தந்தை பெயர் ஆனையப்பப்பிள்ளை. குற்றாலம் பிள்ளை எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் அடிப்படையில்தான் நான் சொத்தில் உரிமை உள்ளதாக கூறுகிறேன் என்றால் சரிதான்.

2. வா.சா.ஆ.1 ஆவணம் மூலமாகதான் குற்றாலம் பிள்ளை எனது பெற்றோருக்கு கிரையம் எழுதிக்கொடுத்தார் என்றால் சரிதான். நாங்கள் கிரையம் வாங்குவதற்கு முன்பு குற்றாலம் பிள்ளைதான் அனுபவம் செய்துவந்தார் என்றால் சரிதான். குற்றாலம் பிள்ளைக்கு முன்பு ஆனையப்பப்பிள்ளைக்கு தபசில் சொத்து பாத்தியப்பட்டிருந்தது என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தில் குற்றாலம் பிள்ளையின் தந்தைக்கு பதிவு கிரைய ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்டது என எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

3. என்னிடம் காட்டப்படும் கிரையப்பத்திரம் தான் வா.சா.ஆ.1ல் உள்ள கிரையப்பத்திரம் என்றால் சரிதான். **மேற்படி ஆவணம் பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆனையப்பப்பிள்ளை சொத்துக்களை பிரிவின்றி கிரையம் வாங்கி அனுபவம் செய்துவந்தார் என்றால் சரிதான். ஆனையப்பப்பிள்ளை பிரிவின்றி அனுபவம் செய்துவந்த சொத்தை என் பெற்றோர் குற்றாலம்பிள்ளையிடமிருந்து வாங்கினார் என்றால் சரிதான். மற்றொரு பிரிவின்றி பாதி சாமியாடி நாடாரிடம் இருந்தது.

4. சுப்பிரமணியனும், சாமியாடி நாடாரும் சொத்துக்களை பிரித்துக்கொள்ளவில்லை என்றால் எனக்கு தெரியாது. சொத்துக்கள் பிரிவினை சம்பந்தமாக எனக்கு நேரடியாக தெரியாது. வாய்மொழி பாகப்பிரிவினை எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரியல்ல, பெரியசாமி நாடார், குருசாமி நாடார், சாமிக்கண்ணு நாடார், பூசைப்பெருமாள் நாடாருக்கிடையே பாகப்பிரிவினை நடைபெற்றது. இந்த நான்கு பேர் பாகபிரிவினை தவிர வேறு பாகபிரிவினை கிடையாது. இந்த நான்குநபர்களும் சுப்பிரமணிய நாடாரின் வாரிசுகள் என்றால் சரிதான்.

5. சாமியாடி நாடார் மகன் பெயர் காளிமுத்து என்றால் சரிதான். காளிமுத்துவுக்கும் பெரியசாமி நாடார், குருசாமி நாடார், சாமிக்கண்ணு நாடார், பூசைப்பெருமாள் ஆகியோருக்கிடையே பிரிவினை நடைபெற்றதா என்றால் நடைபெற்றது. 1972ம் ஆண்டு தான் பிரிவினை நடைபெற்றது. காளிமுத்துவுக்கு எந்தெந்த சர்வே எண்ணில் சொத்துக்கள் வழங்கப்பட்டது என எனக்கு தெரியாது. எனது பிராதில் 1972 பாகபிரிவினையில் காளிமுத்துவும் சேர்ந்து பிரித்துக்கொண்டார்கள் என எனது பிராதில் குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல.

6. சுப்பிரமணிய நாடார் ஆண்மக்களுக்கும், சாமியாடிநாடார் மகன் காளிமுத்துவுக்கும் நடந்த பாகபிரிவினைகள் சரியானது என்றால் சரியல்ல. சாட்சி தற்போது தீவிரமாக யோசித்துவிட்டு சரியென்று கூறினார். குற்றாலம் பிள்ளையிடம் சுப்பிரமணியனின் ஆண்மக்கள் கிரையம் வாங்குவதற்கு முன்பு மற்றொரு பிரிவின்றி பாதியை குற்றாலம் பிள்ளையிடம் காளிமுத்து நாடார் கிரையம் வாங்கினார் என்றால் சரிதான். சுப்பிரமணிய நாடாருக்கும், சாமியாடி நாடாருக்கும் இடையில் பிரிவினை நடைபெறவில்லை, பிரிவின்றி பாதியை ஆனையப்பப்பிள்ளையிடம் விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். எனதுபிராதில் சுப்பிரமணிய நடாரும், சாமியாடி நாடாரும் பிரித்துக்கொண்டார்கள் என குறிப்பிட்டிருந்தால் அது தவறு என்றால் சரிதான்.

7. நான் பிராதில் சொல்லியுள்ள பாகப்பிரிவினை சம்பந்தமாக நேரடியாக தெரிந்த நபர்கள் யாரும் உள்ளார்களா என்றால் இறந்துவிட்டார்கள். பிரிவினை பற்றி 19.01.2023 ல் தான் எனக்கு தெரியவந்தது. புல எண்.87/1 நிலம் 87/1ஏ , 87/1பி, 87/1சி, 87/1டி என உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் எனக்கு தெரியாது. பூசைப்பெருமாளுக்கு கிழமேலாக எத்தனை அடி பாத்தியம் என்றால் 98 அடி பாத்தியம், தென்வடலாக எனக்கு தெரியாது. 98 அடி பாத்தியம் என்பதற்கு எழுத்துமூலமான ஆவணம் உண்டா என்றால் புலவரைபடம் உள்ளது. 1967 ம் ஆண்டு புலவரைபடம் சரியாக உள்ளது. கிழமேல் 98 அடி என்பதை காட்டுதவற்கு எந்த ஆவணமும் என் வசம் இல்லை என்றால் சரியல்ல, பட்டா உள்ளது. அந்த பட்டாவை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றால் சரிதான். எனக்கு பட்டாவை கொடுக்கும்போது

என்னை விசாரிக்கவில்லை. பட்டா எனது தந்தை பெயரில் உள்ளது. இன்றிலிருந்து எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு பட்டா வழங்கப்பட்டது என எனக்கு தெரியாது. சொத்து மதிப்பின் அடிப்படையில் சமபாகமாக பிரிக்கப்பட்டது என்றால் சரியல்ல, சொத்து சமமாக பிரிக்கப்பட்டது.

8. புல எண்.87/1பி, 87/1சி, 87/1டி நிலங்கள் ரோட்டுக்கு தொட்டடுத்து மேற்குபுறத்தில் உள்ளது என்றால் சரிதான். எனது தந்தைக்கு 30 செண்ட் பாத்தியம் என்பதற்கு ஆவணம் உண்டா என்றால் கிடையாது. பெரியசாமி நாடாருக்கு 20 செண்டும், குருசாமி நாடாருக்கு 20 செண்டும், சாமிக்கண்ணு நாடாருக்கு 25 செண்டும் கொடுக்கப்பட்டதாக சொல்வதற்கு எந்த ஆவணமும் கிடையாது என்றால் சரிதான். வாய்மொழியாக தான் பிரிவினை ஏற்பட்டது. வாய்மொழி பிரிவினை பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான், எனது தந்தை சொல்லிதான் தெரியும். எனது தந்தை 25.06.2012ம் ஆண்டு இறந்தார். எனது தந்தை வாய்மொழி பாகத்தில் கிடைத்த சொத்துக்கு பட்டா கேட்டு மனு கொடுத்தாரா என்றால் எனக்கு தெரியாது.

9. நான் கட்டியுள்ள வீட்டில் பிரதிவாதி உரிமை கொண்டாடவில்லை. வீடு புல எண்.87/1பி–ல் உள்ளது. புல எண்.87/1ஏ–ல் கிழமேலாக எத்தனை அடி, தென்வடலாக எத்தனை அடி நான் உரிமை கொண்டாடுகிறேன் என்றால் எனக்கு அளவுகள் தெரியாது. நான் சொத்தை அளந்து பார்க்கவில்லை. பூசைப்பெருமாள் மனைவி பெயர் சுப்பம்மாள். பூசைப்பெருமாள் சகோதரர் பெரியசமிக்கு குழந்தை கிடையாது என்றால் சரிதான். குருசாமி மகன் பெயர் நடராஜன் என்றால் சரிதான்.

10. சாமிக்கண்ணுக்கு பரமசிவன், செல்வி, ஸ்ரீவள்ளி ஆகியோர்கள் வாரிசுகள். செல்வியின் வாரிசு தான் 5 ம் பிரதிவாதி வெற்றிவேல் முருகன் என்றால் சரிதான். வெற்றிவேல் முருகன் அவர் கிரையம பெற்ற சொத்தை சித்திரைக்கனிக்கு கிரையம் செய்துகொடுத்துவிட்டார் என்றால் சரிதான். சித்திரைக்கனிக்கு எதிராக எந்த பரிகாரமும் தேவையில்லை என்றால் சரிதான். சித்திரைக்கனி வழக்கில் சேர்க்காததற்கு குறிப்பிட்டு காரணம் இல்லை என்றால் எனக்கு தெரியாது. சித்திரைக்கனிக்கு தென்பக்கம் பரமசிவன் சொத்து இருக்கிறது என்றால் எனக்கு தெரியாது. சித்திரைக்கனி இடத்திற்கு வடபக்கம் ஆதிநாராயணன் சொத்து உள்ளதா என்றால் எங்கள் சொத்து உள்ளது.

11. சித்திரைக்கனி அனுபவம் செய்துவரும் இடத்தையும், அதற்கு வடபுறம் உள்ள இடத்தையும் பிரிப்பதற்கு வேலி உண்டா என்றால் வேலி இருக்கிறது. சித்திரைக்கனி அவர் இடத்தை சுற்றி கம்பிவேலி அமைத்துள்ளாரா என்றால் எனக்கு தெரியாது. எனது வீட்டிற்கு மேல்பக்கம் சித்திரைக்கனி இடம் உள்ளதா என்றால் சரியல்ல, எனது வீட்டிற்கு தெற்கோரம் உள்ளது. சித்திரைக்கனி அவர் இடத்தில் செங்கல்மால் வைத்துள்ளார். 2 ஆண்டுகளாக செங்கல்மால் உள்ளது.

12. சித்திரைக்கனி பெயரில் உள்ள பத்திரத்தை நான் வழக்கறிஞரிடம் கொடுத்தேனா என்றால் இல்லை. வெற்றிவேல் முருகனுக்கும் எனக்கும் விரோதம் உண்டு என்றால் சரிதான். ராமராஜ், இருதயராஜ் கிரையம் வாங்கிய சொத்தில் எனக்கு உரிமை உள்ளது. ராமராஜ், இருதயராஜ் கிரையம் வாங்கிய சொத்தை சுற்றி வேலி

அமைத்துள்ளர்களா என்றால் மேல்பக்கம் மட்டும் வேலி அமைத்துள்ளார்கள். எந்த ஆண்டு போடப்பட்டது என்றால் 2023ல் போடப்பட்டது.

13. வாய்மொழி பாகபிரிவினையின் அடிப்படையில் தான் சொத்தில் உரிமை கோருகிறோம் என்றால் சரிதான். அந்த வாய்மொழி பாகபிரிவினை சம்பந்தமாக யாருக்கு விவரம் தெரியும் என்று எனது பிராதில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளோம். எனது பிராதில் எந்த இடத்திலும் சுப்பிரமணியநாடார் ஆண்மக்களும், சாமியாடிநாடார் ஆண்மகனும் பிரிவினை செய்தததாக சொல்லவில்லை என்றால் சரிதான்.

14. எனது முதல்விசாரணை வாக்குமூலத்தில் 7 வதுபத்தியில் சுப்பிரமணிய நாடார் ஆண்மக்களும், சாமியாடி மகன் காளிமுத்துவும் எந்தவொரு பிரிவினையும் செய்யவில்லை என்று சொல்லியுள்ளேன் என்றால் (சாட்சி முதல்விசாரணை வாக்குமூலத்தை வாங்கி பார்த்துவிட்டு புரியவில்லை, தெரியாது என கூறினார்) நான் முன்னுக்குபின் முரணாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. முதல்விசாரணையில் சொல்லியுள்துபோல் எந்தவொரு பாகபிரிவினையும் நடைபெறவில்லை என்றாலும், பட்டா நடவடிக்கையும், சொத்து உட்பிரிவு நடைபெற்ற அனைத்து விவரமும் தெரியும் என்றாலும், அவ்வாறு தெரிந்திருந்தும் பூசைப்பெருமாள் நாடார் ஆட்சேபனை தெரிவித்தது கிடையாது என்றாலும் சரியல்ல. எனது தந்தை பட்டாவிற்கு மனுகொடுத்து அது நிராகரிக்கப்பட்து என்றால் எனக்கு தெரியாது.

15. 1,2 பிரதிவாதிகள் எழுதிக்கொடுத்த கிரையம் சட்டப்படியானது என்றாலும், புல எண்.87/1ஏ நிலத்தில் எனக்கோ, எனது தகப்பனாருக்கோ அவருடன் உடன்பிறந்தவர்களுகோ எந்தவொரு அனுபவமும், உரிமையும் கிடையாது என்றாலும் சரியல்ல. புல எண்.87/1ஏ நிலம் காளிமுத்துநாடார் பாகத்திற்கு ஒதுக்கப்பட்ட சொத்து, அதனால் அவர் பெயருக்கு பட்டா வழங்கப்பட்டது என்றாலும் சரியல்ல. காளிமுத்து நாடார் பாக சொத்தை பொறுத்துதான் 1,2 பிரதிவாதிகள் கிரையம் பத்திரம் எழுதிக்கொடுத்துள்ளனர் என்றாலும், நான் சொல்லியுள்ள 2ம் தபசில் சொத்திற்கு அளவுகள், எல்கைகள் தவறு என்றாலும், அதில் கண்டபடி சொத்து ஸ்தத்தில் கிடையாது என்றாலும், 2ம்தபசில் சொத்து எனது அனுபவத்தில் கிடையாது என்றாலும், சித்திரைக்கனியை கட்சி சேர்க்காமல் நான் தாக்கல் செய்த பிராது நிலைக்கத்தக்கதல்ல என்றாலும், நான் கோரியுள்ள பரிகாரம் காலவரையறை தோஷத்தால் பாதக்கப்பட்டுள்ளது என்றாலும், எனக்கு சொத்து வரலாறும், பாகப்பிரிவினை பற்றி எதுவும் தெரியாது என்றாலும், எனது வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல.

ஒம்/–K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி.